**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சாத்தான்குளம்**
**முன்னிலை : செல்வி. ம.வி.தேவி ரக்ஷா, B.B.A., L.L.B (Hons)**
**நீதித்துறை நடுவர், சாத்தான்குளம்**
**2026 ஆம் ஆண்டு, ஜுன் மாதம் 30 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை**
**D.VC.No.6/2021**
**in**
**Crl.M.P.No.454/2025**

திருமதி. சாந்தி,
க/பெ. கவிராஜ் S. ராஜ்குமார்,
688, வடக்கு ரதவீதி,
சாத்தான்குளம். ....... மனுதாரர்

/எதிர்/

கவிராஜ் S. ராஜ்குமார்,
த/பெ. சண்முகசுந்தரம்,
சுவாமி சன்னதி தெரு,
சாத்தான்குளம். ........ எதிர்மனுதாரர்

இம்மனுவானது 02.06.2025 ஆம் தேதி இந்நீதிமன்ற கோப்புக்கு எடுக்கப்பட்டு 08.06.2026 ஆம் தேதி என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. சூரிய பகவான்தாஸ் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. சிவபாலன் அவர்கள் முன்னிலையாகியும் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு வாதுரை கேட்கப்பட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

**உத்தரவு**

இம்மனுவானது, மனுவுடன் இணைத்து தாக்கல் செய்யப்பட்ட 1) 01.04.2021 தேதிய மனுதாரர் சொத்தினை அபகரிக்க எதிர்மனுதாரர் மோசடியாக உற்பத்தி செய்த செட்டில்மெண்ட் ஆவண எண் 571/2021 இன் சார்பதிவாளர் அலுவலக நகல் 2) 23.11.2000 தேதிய பொது அதிகார ஆவண எண் 134/2000 இன் சார்பதிவாளர் அலுவலக நகல் 3) 28.12.2024 தேதிய வில்லங்க சான்றிதழ் இணையதள நகல் 4) மனுதாரரின் பெயரிலுள்ள சொத்தில் எதிர்மனுதாரரின் பெயரினை இணைத்துள்ளதை காட்டக்கூடிய கூட்டு பட்டாவின் இணையதள நகல் 5) மனுதாரரின் பெயரிலுள்ள மின் இணைப்பினை பெயர் மாற்றம் செய்ய எதிர்மனுதாரர் கொடுத்த விண்ணப்பத்தின் online status இன் இணையதள நகல் 6) மனுதாரர், எதிர்மனுதாரர் மற்றும் அவரது வகையறாக்கள் மீது சாத்தான்குளம் காவல்நிலையத்தில் கொடுத்த புகார்மனு மற்றும் அதற்காக காவல்நிலையத்தில் வழங்கப்பட்ட புகார்மனு ரசீது எண் 162/2025 அசல் 7) மனுதாரர் சாத்தான்குளம் பேரூராட்சி அலுவலகம் மற்றும் மின்சார வாரியத்துறை அலுவலகத்திற்கு கொடுத்த தடங்கல் கோரும் மனு மற்றும் தபால்துறை ரசீது அசல் 8) சாத்தான்குளம் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கி


DEVI RAKSHA M V
Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.06.30 16:23:11 +0530

கணக்கு எண் 398111256680 இன் கணக்கு விவர பட்டியல் நகல் 9) மனுதாரரின் மகளின் பூப்புனித நீராட்டு விழாவின் புகைப்படம் அசல் மற்றும் 10) சாத்தான்குளம் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் மனுதாரர் 04.12.2024 ஆம் தேதியன்று அளித்த புகார்மனுவிற்கு காவல்நிலையத்தில் வழங்கப்பட்ட ரசீது எண் 66/2024 இன் நகல் ஆகிய ஆவணங்களை வழக்கில் குறியீடு செய்வதற்காக அனுமதி கோரி, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 7 விதி 14(3) இன் கீழ் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**1) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவின் விவரம் பின்வருமாறு:**

வழக்கானது நிலுவையில் இருக்கும் நிலையில் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை அவரது பெயருக்கு மோசடியாக செட்டில்மென்ட் ஆவணம் ஏற்படுத்தியுள்ள விவரம் தற்போது தான் மனுதாரருக்கு தெரிய வந்தது. மனுதாரரின் தந்தை வழியில் மனுதாரருக்கும் அவரது சகோதரிகளுக்கும் கிடைக்கப்பெற்ற சொத்துக்களை அவர்கள் பிரித்துக் கொண்டதில், மனுதாரரின் பாக சொத்துக்கள் எதிர்மனுதாரரின் அழுத்தத்தின் பேரில் விற்பனை செய்யப்பட்டது. அதில் கிடைத்த பணத்தைக் கொண்டு, மனுதாரருக்கு சாத்தான்குளம் சார்பதிவாளர் அலுவலக கிரைய ஆவண எண் 1140/2003, 1157/2003, 521/2006 ஆகிய ஆவணங்கள் மூலம் மனுதாரரின் பெயரில் வாங்கப்பட்டது. அதன் பட்டா எண்கள் 2425 மற்றும் 947 ஆகும்.

மேற்படி சொத்தில் மனுதாரர் கதவு எண்கள் 68B மற்றும் 68F ஆகிய இலக்கமிட்ட வீடு கட்டி, அதில் குடியிருந்து வருகிறார். அந்த சொத்தை எதிர்மனுதாரர் மற்றும் முத்துமாரி ஆகிய இருவரும் மனுதாரரிடமிருந்து அபகரித்து மருத்துவர் திரு.அபூபக்கர் சித்திக், சிவராமன் மற்றும் பொன்பாண்டி ஆகியோர்களுடன் கூட்டு சேர்ந்து, சதிசெய்து, திட்டமிட்டு, ஆள்மாறாட்டம் செய்து மோசடி ஆவணத்தை உற்பத்தி செய்து அபகரிக்க முயற்சி செய்துள்ளனர். மனுதாரருக்கு வாழ்நாள் சான்றிதழ் கோரி மனுதாரர் கடந்த 01.04.2021 ஆம் தேதியன்று மருத்துவர் முன்பு நேரில் ஆஜராகி கையொப்பம் செய்ததாக போலி கையெழுத்துடன் கூடிய மோசடி ஆவணத்தை உற்பத்தி செய்துள்ளனர். அன்றைய தினமே எதிர்மனுதாரர் மற்றும் அவரது வகையாட்கள் மனுதாரரின் சொத்தினை பொறுத்து எதிர்மனுதாரரின் பெயருக்கு சாத்தான்குளம் சார்பதிவாளர் அலுவலகத்தில் தான செட்டில்மென்ட் ஆவணம் எண் 571/2021 ஐ மோசடியாக உற்பத்தி செய்துள்ளார்கள். மோசடி செட்டில்மெண்ட் ஆவணம் மனுதாரரின் சொத்தில் எதிர்மனுதாரருக்கு எந்தவித உரிமையை ஏற்படுத்தாது. அதன் அடிப்படையில் எதிர்மனுதாரர் வருவாய்துறை பட்டாவில் மோசடியாக அவரின் பெயரை கூட்டாக சேர்த்துள்ளார்.

மேற்படி மோசடி தானசெட்டில்மென்ட் ஆவணத்தினால் மனுதாரரின் சொத்து மனுதாரரிடமிருந்து சட்ட விரோதமாக அபகரிப்பதற்கான அபாயம் ஏற்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் மற்றும் அவரது வகையறாக்களின் சட்டவிரோத செயல்களினால் மனுதாரருக்கு சட்டவிரோத இழப்பும் மனஉளைச்சலும் ஏற்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் மனுதாரரின் நகைகள், பணத்தையும்

DEVI RAKSHA M V Digitally signed by DEVI RAKSHA M V Date: 2026.06.30 16:23:17 +0530

அபகரித்துள்ள நிலையில் கடைசி ஆதாரமான மனுதாரரின் வீட்டையும் அவரது வகையாட்களுடன் கூட்டு சேர்ந்து திட்டமிட்டு அபகரித்து வருகிறார். கடந்த 28.12.2024 ஆம் தேதியில் இருந்து மனுதாரரை அவருடைய சொத்தில் இருந்து வெளியேற்றி எதிர்மனுதாரர் குடியிருக்க போவதாக கூறி வந்தார். மனுதாரர் அவருடைய சொத்தினை பொறுத்து வில்லங்கம் பார்த்து, 21.02.2025 மற்றும் 05.03.2025 தேதியில் மேற்படி ஆவணங்களுக்கு நகல் வாங்கி பார்த்தபோது தான் மனுதாரருக்கு மேற்படி நபர்களின் மோசடி செயல்கள் தெரிய வந்தது. மனுதாரரின் தந்தை வழியில் மனுதாரருக்கு தனித்து பாத்தியப்பட்ட மற்றும் வாரிசு வழியில் கிடைக்கக் கூடிய சொத்துக்களை பொறுத்து மட்டும் விற்பனை செய்ய எதிர்மனுதாரர் பெயருக்கு பொது அதிகார ஆவண எண் 134/2002 கொடுக்கப்பட்டிருந்தது. பொது அதிகார ஆவணத்தினை சட்ட விரோதமாக பயன்படுத்தி போலியாக இட்டு மனுதாரருக்கு வாழ்நாள் சான்றிதழ் உற்பத்தி செய்து எதிர்மனுதாரர் அவரது பெயருக்கு செட்டில்மென்ட் ஆவணத்தை சட்டவிரோதமாக ஏற்படுத்தியுள்ளார். பவர் ஆவணம் எழுதப்பட்ட 23.11.2000 தேதியில் மனுதாரருக்கு பாத்தியப்பட்டதாக இல்லை.

மேற்படி சொத்தானது பவர் ஆவணத்திற்கு பின்பு மனுதாரரால் கிரைய ஆவண எண் 1140/2003, 1157/2003, 521/2006 மூலம் 2003 ஆம் ஆண்டில் வாங்கப்பட்டது. எனவே, மேற்படி பவர் ஆவணமானது சொத்தை பொறுத்து அதிகாரம் அளிக்கப்பட்ட ஆவணம் அல்ல. எதிர்மனுதாரர் மற்றும் அவரது வகையாட்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி கடந்த 12.04.2025 அன்று மனுதாரர் சாத்தான்குளம் காவல்நிலையத்தில் புகார்மனு அளித்தார். அந்த புகார்மனுவிற்கு ரசீது எண் 162/2025 வழங்கப்பட்டது. எதிர்மனுதாரர் சாத்தான்குளம் பேரூராட்சியில் மனுதபசில் சொத்தில் மனுதாரின் பெயரில் உள்ள சொத்து வரி விதிப்பினை அவரது பெயருக்கு மாற்றியதுடன், மின்கட்டண இணைப்பையும் மனுதாரர் பெயருக்கு மாற்ற முயற்சி செய்து 200073670525375 என்ற எண் கொண்ட விண்ணப்பத்தை 03.05.2025 தேதியில் அளித்தார். மேலும், எதிர்மனுதாரர் சட்டவிரோதமாக முத்துமாரி என்பவரை இரண்டாவதாக திருமணம் செய்து மனுதாரரை கைவிட்டு விட்டு மனுதாரரின் நகைகள் மற்றும் பணத்தினை அபகரித்துள்ள நிலையில் மனுதாரரின் கடைசி ஆதாரமான மனுதாரர் தற்போது குடியிருந்து வரும் மனுதபசில் வீட்டினை மனுதாரர் பெயருக்கு மோசடியாக செட்டில்மென்ட் ஆவணத்தை ஏற்படுத்தி மனுதபசில் சொத்தில் இருந்து மனுதாரரை வெளியேற்றுவதற்காக மனுதபசில் சொத்தை விற்பனை மற்றும் வில்லங்க பாரதீனம் செய்ய முயற்சி செய்து வருகிறார். மேற்படி சங்கதிகள் அனைத்தும் அசல் மனு நிலுவையில் இருந்து வரும் நிலையில் தற்போது தான் எழுந்துள்ளது.

மனுதாரர் தரப்பில் மேற்படி சங்கதிகளை நிரூபணம் செய்வதற்கு மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரர் மோசடியாக உற்பத்தி செய்த தான செட்டில்மென்ட் ஆவணம் 571/2021, வருவாய்துறை பட்டாவில் மோசடியாக கூட்டாக எதிர்மனுதாரர் பெயரினை சேர்த்துள்ளதை காண்பிக்கக்கூடிய பட்டா இணையதள நகல், எதிர்மனுதாரர் மனுதாரரின் சொத்தினை அபகரிக்க பயன்படுத்திய பொது அதிகார ஆவண எண் 134/2000 இன் சான்றிட்ட நகல், மனுதாரர் காவல்நிலையத்தில் அளித்த புகார்மனு மற்றும் அதன் ரசீது எண்

DEVI RAKSHA M V
Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.06.30 16:23:21 +0530

162/2025, மனுதாரர் பெயரில் உள்ள மின் இணைப்பினை பெயர் மாற்றம் செய்ய எதிர்மனுதாரர் கொடுத்த விண்ணப்பத்தின் online status, மனுதாரர் சாத்தான்குளம் பேரூராட்சி அலுவலகம் & மின்சார வாரியத்துறை அலுவலகத்திற்கு கொடுத்த தடங்கல் கோரும் மனு மற்றும் Acknowledgment card ஆகியவற்றை மேற்படி வழக்கில் குறியீடு செய்ய வேண்டியுள்ளது.

மேற்படி மனுதாரரை சாட்சியம் அளிக்க திரும்ப அளித்து கூடுதல் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து மேற்படி ஆவணங்களை குறியீடு செய்வது அவசியமானதாக இருக்கிறது என்றும், மனுதாரரின் சாத்தான்குளம் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கி கணக்கு எண் 398111256680 இன் கணக்கு விவர பட்டியல் மற்றும் மனுதாரரின் புனித நீராட்டுவிழா புகைப்படம் ஆகியவை மேற்படி வழக்கில் மனுதாரர் சாட்சியம் அளிக்கும் போது கிடைக்கப் பெறுவதில் ஏற்பட்ட கால தாமத்தினால் மேற்படி வழக்கில் குறியீடு செய்ய இயலவில்லை. தற்போது தான் மேற்படி ஆவணங்கள் மனுதாரர் வசம் கிடைத்ததால் அதையும் தற்போது குறியீடு செய்ய வேண்டி அவசியமாக உள்ளது. மேற்படி ஆவணங்களை முன்பே நீதிமன்றத்தில் ஆஜர் செய்யாமல் இருந்தது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. அது தெய்வாதீனமாய் ஏற்பட்டதாகும். எனவே, மனுதாரர் தற்போது தாக்கல் செய்துள்ள கூடுதல் நிரூபண அபிடவிட்டுடன் குறியீடு செய்ய மனுவில் கண்ட ஆவணங்களை ஏற்று தக்க உத்தரவு பிறப்பிக்குமாறு மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**<u>2) எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரை சுருக்கம்</u>**

மனுதாரரின் மனு சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. மனுதாரர் மனுவில் கூறியுள்ள சங்கதிகளை மறுத்து எதிர்மனுதாரர் எதிருரை தாக்கல் செய்துள்ளார். மேலும், எதிருரையில், உண்மையில் தாவா மனுவானது அசல் மனுவை போலவே பிறர் தூண்டுதலின் பேரில் அசல் மனுவின் வழக்கு விசாரணையின் போக்கினை திசை திருப்புவதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ள ஒன்றாகும். தாவா மனுவில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அனைத்தும் அடிப்படை ஆதாரமற்ற பொய்களாகும். மனுதாரர் குடியிருந்து வரும் வீட்டினை எதிர்மனுதாரர் விற்க போவதாக மனுதாரர் தரப்பில் கூறப்பட்டுள்ளது முற்றிலும் கற்பனையான ஒன்றாகும். மேற்படி வீட்டில் இருந்து மனுதாரரை வெளியேற்றி எதிர்மனுதாரர் குடியிருக்கப் போவதாக எதிர்மனுதாரர் கூறி வருவதாக சொல்வது முற்றிலும் பொய்யானதாகும். பிறர் தூண்டுதலால் மனுதாரரால் அசல் மனு தாக்கல் செய்த கால கட்டத்திற்கு முன்பு அதாவது மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் வளர்ப்பு மகள் திருமணத்திற்கு முன்பு வரை மனுதாரரும் எதிர்மனுதாரரும் நல்ல முறையில் சேர்ந்து வாழ்ந்த காலத்தில் மனுதாரர் நல்ல ஆரோக்கியமான மன நிலையில் இருந்த கால கட்டத்தில் மனுதாரர் சம்மதத்தின் பேரில் மனுதாரர் குடியிருந்து வரும் வீட்டினை பொறுத்து சட்டப்படி ஏற்படுத்தப்பட்டுள்ள ஆவணங்கள் தற்போது தான் தெரிய வந்ததாகவும் அவை அனைத்தும் மனுதாரரால் மோசடியாக ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் மனுவிற்காக மனுதாரர் தரப்பில் திட்டமிட்டு கூறும் பொய்களாகும்.

அசல் மனு விசாரணையின் போக்கினை திசை மாற்றி

DEVI RAKSHA M V Digitally signed by DEVI RAKSHA M V Date: 2026.06.30 16:23:27 +0530

எதிர்மனுதாரருக்கு எதிராக பல பொய்யான ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை அடுக்கடுக்காக கூறி மனுதாரர் தரப்பின் தவறுகளையும் தீய நோக்கத்தையும் மறைப்பதற்காக மட்டுமே தாவா மனு போன்ற பல மனுக்கள் மனுதாரர் தரப்பில் தொடர்ந்து தாக்கல் செய்யப்பட்டு வருகிறது. மனுதாரர் தனது தரப்பு சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய ஆணையுறுதி ஆவணத்தை தாக்கல் செய்யும்போது வேண்டுமென்றே தனது பெயரில் இருந்து வரும் சாத்தான்குளம் பாரத ஸ்டேட் வங்கி கணக்கு பற்றிய விபரங்களை மறைத்துவிட்டு அது பற்றி குறுக்கு விசாரணையில் எதிர்மனுதாரர் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டதால் தனது தரப்பு மோசடியான தவறினை மூடி மறைப்பதற்காக தற்போது தான் மேற்படி வங்கி சம்பந்தப்பட்ட ஆவணங்கள் கிடைத்துள்ளது என்று கூறுவது முற்றிலும் ஏற்கக்கூடியதல்ல.

மேலும், சட்ட விதிமுறைகளை பின்பற்றாமல் மனுதாரர் தரப்பில் தாவா மனுவுடன் தாக்கல் செய்துள்ள 9 ஆவது ஆவணமான மனுதாரரின் மகளின் பூப்புனித நீராட்டுவிழாவின் போது எடுக்கப்பட்டதாக கூறியுள்ளதில் மேற்படி புகைப்படங்கள் மனுதாரர் தரப்பின் பூப்புனித நீராட்டு விழாவின் போது தான் எடுக்கப்பட்டது என்பதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை. ஏனெனில் அவ்வாறான விழாவின் போது நடைபெறக்கூடிய பல சடங்கு சம்பிரதாயங்களில் ஒன்று கூட மேற்படி புகைப்படங்களில் காணப்படவில்லை. மனுதாரர் குடியிருக்கும் வீடு தொடர்பாக எதிர்மனுதாரர் பெயருக்கு ஏற்பட்டுள்ள வருவாய்த்துறை, மின்சார வாரியத்துறை மற்றும் பேரூராட்சி சம்பந்தப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் மேற்படி வீட்டினை பொறுத்து எதிர்மனுதாரர் பெயருக்கு வழக்கு காலத்திற்கு முன்பே சட்டப்படி ஏற்படுத்தப்பட்டுள்ள சாத்தான்குளம் சார்பதிவக செட்டில்மென்ட் ஆவணம் எண் 571/2021 இன் படி இயல்பாக ஏற்பட்டதாகும். எனவே, மனுதாரர் தாக்கல் செய்த மனுவினை தள்ளுபடி செய்து உத்தரவிடுமாறு எதிருரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

3) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டன. மனுவை ஆதரித்து தாக்கல் செய்யப்பட்டுள்ள சத்தியப்பிரமாண வாக்குமூலமும், வழக்கு ஆவணங்களும் பரிசீலிக்கப்பட்டன.

4) இம்மனுவில் ஆராயப்பட வேண்டிய சங்கதி யாதெனில், மனுதாரர் மனுவில் கோரியுள்ளபடி பரிகாரம் பெற தகுதியுடைவரா? இல்லையா?

**5) <u>தீர்வு:</u>**

மனுதாரர் தாக்கல் செய்த மனுவினை பரிசீலனை செய்யும்போது, வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட நேரத்தில், மனுவில் குறிப்பிடப்பட்ட ஆவணங்கள் கிடைக்கப் பெறுவதில் ஏற்பட்ட கால தாமதத்தினால் மனுதாரர் சாட்சியம் அளிக்கும் போது மனுதாரரால் அவற்றை தாக்கல் செய்ய இயலவில்லை என்றும், தற்போது தாக்கல் செய்ய விரும்பும் ஆவணங்கள் வழக்கில் எழுந்துள்ள பிரச்சினைகளை முழுமையாகவும் நியாயமாகவும் தீர்மானிக்க இன்றியமையாதவை என்றும் மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இவ்வழக்கில் ஆவணங்களைத் தாக்கல் செய்வதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது உண்மைதான் என்றாலும், கோரப்படும் ஆவணங்கள் வழக்கில் உள்ள சர்ச்சைக்குரிய விவகாரங்களைத் தீர்மானிக்க

DEVI RAKSHA M V Digitally signed by DEVI RAKSHA M V Date: 2026.06.30 16:23:32 +0530

தொடர்புடையவையாக இருப்பதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், இவ்வாவணங்களை ஏற்றுக்கொள்வதால் எதிர்மனுதாரருக்கு ஈடுசெய்ய முடியாத பாதிப்பு எதுவும் ஏற்படாது. ஆகையால், மனுதாரர் மனுவில் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கக்கூடியது என இந்நீதிமன்றம் முடிவு செய்து இம்மனுவினை அனுமதித்து உத்தரவிடுவதே நீதியின்பால் சரியானதாக இருக்கும் என இந்நீதிமன்றம் கருதி மனுவானது அனுமதிக்கப்படுகிறது.

முடிவில், மனுவானது அனுமதிக்கப்படுகிறது.

இவ்வுத்தரவு சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2026 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 30 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

DEVI RAKSHA M V

Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.06.30 16:23:37 +0530

நீதித்துறை நடுவர்,
சாத்தான்குளம்.